# காதல் எனப்படுவது யாதெனில்...

## டாக்டர் என்.ராஜ்மோகன்

தனது மகளைப் புரிந்து கொள்ளவே முடியாமல், ஆலோசனைக்காக என்னிடம் வந்தார் பரிதாபத்துக்குரிய அந்தத் தந்தை.

"வசதிக்குக் குறைவில்லாத குடும்பம் எங்களோடது. திவ்யா எங்களுக்கு ஒரே பொண்ணு. செல்லம் குடுத்துத்தான் வளர்த்தோம். ஆனாலும், அவ மத்த பெரிய வீட்டுப் பொண்ணுங்க மாதிரி, ஆடம்பரத்தை விரும்பாம வளர்ந்தா. ரொம்ப ரிசர்வ்டா இருப்பா. இத்தனை சுதந்திரம் குடுத்தும், அவ அமைதியே வடிவா வளர்றதைப் பார்த்து பூரிச்சுப் போயிருந்தோம், சார்!" என்றவரின் குரலில் போகப் போக சத்து குறைந்தது.

"யூ.ஜி. படிக்கும்போதே அவ யாரையோ காதலிக்கறானு அவ ஃப்ரண்டு மூலமா எனக்கு தகவல் வந்துச்சு. காதலை எதிர்க்குற ஆளில்ல நான். அவகிட்ட எதையும் காட்டிக்காம, நானே அந்தப் பையனைப் பத்தி விசாரிச்சுப் பார்த்தேன். காலேஜ்ல பொண்ணுங்க மத்தியில அவனுக்குதான் க்ரேஸ். எல்லாரும் ஹீரோவா மதிச்சாலும் அவன் ரொம்ப பணிவானவன். நல்ல பையனும்கூட. செலக்‌ஷன் ஓகே. ஆனா, 'அவளா பர்மிஷன் கேக்கும்போது பாத்துக்கலாம்'னு நான் அப்போதைக்கு விட்டுட்டேன். கொஞ்சநாள் கழிச்சு, 'அவங்க ரெண்டு பேருக்கும் ஏதோ சண்டை. இப்பொல்லாம் பேசிக்கறதே இல்லை'னு அதே ஃப்ரண்டு என்கிட்ட சொன்னா. அதுக்கான சோகம், மூட்-அவுட் எல்லாம் திவ்யா முகத்துல தெரிஞ்சுது. ஆனா, என்கிட்ட அவளா எதுவுமே சொல்லலை.

பெரிய வார்த்தையெல்லாம் சட்டுனு பேசறா. என்ன பிரச்னையாயிருக்கும்னு அவ காலேஜ்ல விசாரிச்சா..." அடுத்த வார்த்தையை சொல்ல அவர் சிரமப்பட்டுத்தான் போனார்.

"அந்த காலேஜ்ல வேலை பார்க்குற, கல்யாணமான ஒரு லெக்சரரை அவ காதலிக்கறதா காலேஜே கொல்லுனு சிரிச்சுக்கிட்டிருக்கு. எனக்கு என்ன பண்றதுனு தெரியலை. முதல்ல வந்த காதலைப் பொறுத்தவரை, அது ஏதோ பப்பி லவ். அதனாலதான் நிலைக்கலை. இந்த காலத்துப் பிள்ளைங்க இப்படித்தானே இருக்காங்கனு நினைச்சிக்கிட்டேன். ஆனா, உடனடியா அவ இப்படி ஒருத்தனை செலக்ட் பண்ணினதைப் பார்த்தா, திவ்யா மேலதான் தப்பு இருக்குமோனு எனக்குத் தோணுது" என்று முடித்தபோது கண்ணீரால் அவரது கன்னம் நனைந்திருந்தது.

கேட்டவுடன் யாருக்குமே குழப்பத்தை ஏற்படுத்தும் இந்தக் கதையில் போகப் போகத்தான் தெளிவு கிடைத்தது. பழைய கல்லூரி காதலனை தேடிப் பிடித்து விசாரித்தபோது, "ஆமா சார்.. அவ விஷயத்துல நான் சின்சியராதான் இருந்தேன். ஆனா, ஒரு சின்ன பிரச்னைக்குப் போய், 'உனக்கும் எனக்கும் சரி வராது, நீ பெரிய மன்மதன்.. நான் அப்படியில்ல.. உனக்கேத்தவ கிடைப்பா.. நல்லா இரு'னு என்னென்னவோ பேசினா திவ்யா. 'இவ்ளோ காம்ப்ளக்ஸ்ல இருக்குறவளோட எப்படி வாழ முடியும்'னு நானும் விட்டுட்டேன்" என்றான் அவன்.

யூ.ஜி. முடிச்சதும் அவங்க அம்மா மாப்பிள்ளை பார்க்கலாம்னு ஆரம்பிச்சா. ஆனா, விஷயம் தெரிஞ்சிருந்ததால நானே திவ்யாகிட்ட போய் 'என்னம்மா பண்றது?'னு கேட்டேன். அவ அவன் பேரை சொல்லுவானு எதிர்பார்த்தேன். ம்ஹூம். மேற்கொண்டு படிக்கணும்னுதான் சொன்னா.

படிச்ச காலேஜ் வேண்டாம்னு அவளே முடிவு பண்ணி, பி.ஜி.யில கோ-எட் இருக்கிற ஒரு பாய்ஸ் காலேஜ்ல சேர்ந்தா. ஆனா, அங்க போன பிறகு அவ நடவடிக்கை இன்னும் மோசமாயிடுச்சு. எப்பவும் ஆவரேஜ் மார்க் வாங்குறவ இப்போ அரியர்ஸ் மேல அரியர்ஸா வச்சிருக்கா. முந்தியெல்லாம் ஓரமா அவளோட ஒட்டிக்கிட்டிருந்த உற்சாகம்கூட இப்போ இல்ல. சரி, கல்யாணத்தைப் பண்ணி வச்சிடலாம்னு பார்த்தா, 'முடியவே முடியாது'னு அடம் பிடிக்கறா. கட்டாயப்படுத்தினா தற்கொலை பண்ணிக்குவேன்னு

அடுத்ததாக அந்த லெக்சரரிடம் திவ்யாவின் தந்தையை பேசச் சொன்னேன். "ஆமா.. என்கிட்டயே வந்து என்னை காதலிக்கறதா அவ சொன்னா. அப்பவே நான் உங்களை கூப்பிட்டு, உங்க பொண்ணை வார்ன் பண்ணச் சொல்லலாம்னு நெனைச்சேன். ஆமா, உங்க பொண்ணுக்கு என்ன சார் பிரச்னை" என்று திருப்பிக் கேட்டிருக்கிறார் அவர்.

ஆக, இது வரைக்கும் கிடைத்த செய்திகளை வைத்து எல்லா பிரச்னைகளையும் உருவாக்கிக் கொண்டவள் திவ்யாதான் என்பதை யார் வேண்டுமானாலும் சொல்லிவிட முடியும். திவ்யாவிடம் பேசியபோது இது உறுதிப்பட்டது.

நடந்த விஷயங்கள் எல்லாமே தன் தந்தைக்கு தெரியும் என்பதை அறிந்ததுமே அழுது ஆர்ப்பாட்டம் செய்துவிட்டாள் திவ்யா. "நான் பிறந்திருக்கவே



கூடாது. என்னைக் கொன்னுடுங்க" என்று கத்தல் வேறு. அந்த லெக்சரரைப் பற்றி கேட்டபோது, "அவர் வாழ்க்கையில நான் குறுக்கிட மாட்டேன். அவரையே நினைச்சுக்கிட்டு வாழ்ந்துடுவேன்" என்று முகத்தை மூடிக் கொண்டு குலுங்கினாள்.

"என்னை யாருக்குமே பிடிக்கறதில்லை. எனக்கு இந்த உலகத்துல சந்தோஷம்னு எதுவும் இல்லை. நான் அழறதுக்குன்னே பிறந்தவ" என்பவையே திவ்யாவின் ஆஸ்தான வார்த்தைகளாக இருந்தன. அவள் பிரச்னைகளுக்குக் காரணமும் அவைதான்.

மனிதர்கள் எல்லோருக்குமே மற்றவர்கள் தன்னை கவனிக்க வேண்டும் என்ற எண்ணம் (attention seeking) இருப்பது இயல்பு. யாரும் செய்யாத ஒரு காரியத்தை செய்து பெருமிதப்பட்டுக் கொள்வது, எதையும் வித்தியாசமாகக் கையாள்வது என்று அதனை எத்தனையோ ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், மற்றவர்கள் கவனத்தை தன் பக்கம் இழுக்க சிலர் விநோதமான தந்திரங்களை செய்கின்றனர். தான் மட்டும் இறைவனால் சபிக்கப் பட்டவள் என்றும், தான் எப்போதும் தாங்க முடியாத துயரத்தில் இருப்பதாகவும் மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதே அந்த விநோதம்.

அப்படிப்பட்டவர்கள் 'இது தனக்கு தோல்வியைத் தரும்' என்று தெரிந்தே ஒரு விஷயத்தில் இறங்குவார்கள். ஒருவேளை அது வெற்றியாகும் போல் தெரிந்தாலும், அவர்களே அதைத் தடுத்து நிறுத்திவிடத் தயங்கமாட்டார்கள். திவ்யா முதலில் அந்தப் பையனிடம் உறவை முறித்துக் கொண்டதற்குக் காரணம் அதுதான். அவளால் அடையவே முடியாத அந்த லெச்சரர் மீது அவள் ஆசைப்பட்டிருப்பதும் அதனால்தான்.

பொதுவாக, இந்த மனப்பான்மையை பெண்களிடம் அதிகம் பார்க்கலாம். 'மற்றவர் கவனத்தை ஈர்ப்பதற்கு என்னிடம் எந்தத் தகுதியும் இல்லை. அழுவதன் மூலமாகவும், சோகத்தில் திளைப்பதன் மூலமாகவும்தான் அடுத்தவர்களை திரும்பிப் பார்க்க வைக்கமுடியும்' என்ற தாழ்வு மனப்பான்மைதான் இதற்கு அடிப்படைக் காரணம். அப்படி தன்னை ஆறுதலாக பலபேர் கொண்டாடுவதைப் பார்த்து அதில் ஒரு சுகத்தை கண்டுவிடுகிறது இவர்களின் மனது.

இதற்கெல்லாம் ஒரே மருந்து தன்னம்பிக்கை மட்டுமே. திவ்யாவுக்கு எந்தக் குறையும் இல்லை. அவள் யாருடைய கவனத்தையும் ஈர்க்க வேண்டிய அவசியம் இல்லை. 'அடுத்தவரின் அனுதாபம் என்பது பெருமைப்பட வேண்டிய விஷயம் இல்லை. வெட்கப்பட வேண்டிய விஷயம்' என்பது அவளுக்குப் புரியும்வரைதான் இந்தப் பிரச்னைகளுக்கு ஆயுள். ஒருவேளை அப்படிப் புரிந்து கொள்ளாவிட்டால்... பிரச்னைகளில்தான் கழியும் திவ்யாவின் ஆயுள்.

இதுவரை, காதலுக்குள் காணக் கிடைக்கும் எத்தனையோ கூட்டல் குறிகளையும் கழித்தல் குறிகளையும் முடிந்தவரை, வகை பிரித்துப் பார்த்தோம். இவை தவிர, பெரும்பாலானவர்களின் அனுபவ எல்லைக்குள் வராத இன்னும் எத்தனையோ விஷயங்கள் இந்த காதல் அல்ஜீப்ராவுக்குள் ஒளிந்து கிடக்கின்றன. இருப்பினும், நாம் இத்தனை நாட்களாக பேசிக்கொண்ட விஷயங்கள், உங்களிடம் காதல் பூங்கொத்து நீட்டுவோரை சரியாக கணித்து, சாமர்த்தியமாக நடந்துகொள்ள உதவும் என்றே நம்புகிறேன்!

**- வாழ்க! வணக்கம்.**

தொகுப்பு: **நவநீதன்**